*பிரசங்கம் 6*

# சோதனையைப் பற்றிய சத்தியம்

## (1 கொரிந்தியர் 10:13)

*1 கொரிந்தியர் 10:13ல் நாம், ''மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்'' என்று வாசிக்கிறோம்.*

*சோதனையைப் பற்றிப் பல பொய்கள் நம்பப்படுகின்றன. வேதாகமத்தில் போதிக்கப் பட்டுள்ளபடி இந்தப் பாடக்கருத்தைப் பற்றி சத்தியத்தைப் புரிந்துகொள்வதற்கு நாம் முயற்சி மேற்கொண்டால், நாம் அந்தப்பொய்களை வெளியாக்க முடியும்.*

*"சோதனை" என்பதைப் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன என்பதை ஆழ்ந்து சிந்திப்பதற்கு முன் நாம், அவ்வார்த்தையை விளக்கப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது. ''சோதனை'' என்பது கிரேக்க மொழியில் peirazō ...[1] என்பதாக உள்ளது. Peirasmos என்பது "சோதனை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள பெயர்ச்சொல்லாக உள்ளது. "சோதனை ஒன்றிற்கு வைத்தல்'' என்பது "பரீட்சை பார்த்து" என்ற வார்த்தையின் அடிப்படை அர்த்தமாக உள்ளது. W. E. வைன் அவர்கள் இவ்வினைச்சொல்லிற்குப் பின்வரும் விளக்கத்தைக் கொடுத்தார்: "(1) சோதிக்க, முயற்சிக்க ...; (2) சோதித்துப் பார்க்க, முயற்சித்தல், நிரூபித்தல்."[2]*

*புதிய ஏற்பாட்டில் இந்த கிரேக்க வார்த்தை, இரண்டு முதன்மை வழிகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது: ''பண்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை வெளிப்படுத்தல் மற்றும் தூண்டுதல்'' என்பதைத் தமது நோக்கமாகக் கொண்ட சோதனைகளுக்கு மற்றும் ''பொல்லாங்கிற்கு கவர்ந்து தூண்டப்படுதல்கள்'' என்ற வகையில் புரிந்துகொள்ளப் படக்கூடிய சோதனைக்கு.[3] மத்தேயு 16:1ல் (மற்றும் இது போன்ற வசனப் பகுதிகளில்) இவ்வார்த்தை, இயேசுவைப் பரிசேயர்கள் சோதித்துப் பார்த்தலுக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது; 2 கொரிந்தியர் 13:5ல் கிறிஸ்தவர்கள் தங்களையே சோதித்துப் பார்த்துக்கொள்ளும்படி கூறப்பட்டுள்ளனர்; மற்றும் யோவான் 6:6ல்வசனப்பகுதி, இயேசு பிலிப்புவை சோதித்தார் என்று கூறுகிறது.[4] சோதிக்கப்படுதல் அல்லது சோதனைகளின்போது கிறிஸ்தவர்கள் உண்மையாக நிலைத்திருந்தால், அவைகள் பயனுள்ள செயல்விளைவைக் கொண்டிருக்க முடியும். நாம், ''என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில்*

அகப்படும்போது, ... அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" மற்றும் "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" என்று வாசிக்கிறோம் (யாக்கோபு 1:2, 12).

இருப்பினும், யாக்கோபு 1:14, 15ல் உள்ளது போன்று, சோதனைகள் "பொல்லாங்கிற்கு கவர்ந்து இழுக்கப்படுதல்" என்பதையும் உள்ளடக்கி இருக்க முடியும்: "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்." புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப் படும்போது இவ்வார்த்தை, பாவம் செய்யும்படி சோதிக்கப்படுதலை அடிக்கடி குறிப்பிடுகிறது. அதுவே நம்மைக் கவலையடையச் செய்யும் அர்த்தமாக உள்ளது. சோதிக்கப்படுதல் பற்றி வேதாகமம் போதிப்பதற்கு நேர் எதிராக, மக்கள் சில வேளைகளில் நம்பும் பொய்களைப் பற்றி நேரெதிராக ஒப்பிட நாம் விரும்புகிறோம்.

## பொய் #1

**பொய்: "பாவம் செய்யும்படி தேவன் உங்களைச் சோதிக்கிறார்."**

**சத்தியம்: பாவம் செய்யும்படி தேவன் நம்மைச் சோதிப்பதில்லை, ஆனால் சோதிக்கப்படும்படி அவர் நம்மை அனுமதிக்கிறார்.**

தேவன் நம்மைச் சோதிக்கிறார் என்பது சோதிக்கப்படுதல் பற்றிய முதல் பொய்யாக உள்ளது. யாக்கோபு 1:13, "சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல" என்று கூறுகிறது.

தேவன் மக்களைச் சோதிப்பதில்லை என்று இவ்வசனப்பகுதி நமக்குத் தெளிவாகப் போதிக்கிறது.[5] சோதிக்கப்படுதல் பற்றித் தேவன் எதையேனும் செய்கிறாரா? ஆம், அவர் செய்கிறார், ஏனெனில் நாம் சோதிக்கப்படும்படி தேவன் அனுமதிக்கிறார் என்றும் வேதாகமம் போதிக்கிறது. ஆதாமும் ஏவாளும் சோதிக்கப்படுவதற்கு அவர் அனுமதித்தார், மற்றும் யோபுவைச் சோதிக்கும்படி சாத்தானுக்கு அவர் அனுமதி அளித்தார். நமது திராணிக்கு மேலாகச் சோதிக்கப்படுவதற்கு அவர் அனுமதிப்பதில்லை (1 கொரிந்தியர் 10:13) என்று பவுல் எழுதியபோது, நாம் சோதிக்கப்படுவதற்கு தேவன் அனுமதிக்கிறார் என்று அவர் சுட்டிக்காண்பித்தார்.

வேறுபாடு என்னவாக உள்ளது? இதை விவரிப்பதற்கு நாம், போதைப் பொருள்களை உபயோகப்படுத்தக் கூடாது என்பதைப் போதிப்பதற்குத் தங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செயல்படும் பெற்றோர்களைப் பற்றிக் கற்பனை செய்து பார்க்கலாம். பிள்ளைகளை அவர்களின் அறைகளில் பூட்டி வைத்து அவர்களுக்கு போதைப் பொருள்களைத் தருகிறவர்கள் அல்லது விற்கிறவர்களுடன் அவர்கள் தொடர்புகொள்ள ஒருபோதும்

*அனுமதியாதிருத்தல் என்பது, தீங்கிழைக்கும் போதைப் பொருட்களை அவர்கள் பயன்படுத்துவதைத் தடுக்கும் ஒரு வழியாக உள்ளது. இருப்பினும் பெற்றோர்கள் அவ்வாறு என்றென்றுமே செய்ய முடியுமா? இல்லையே. பிள்ளைகள் வளருகின்றனர் மற்றும் அவர்கள் புறம்பான உலகத்தை - அவர்கள் சோதிக்கப்படக்கூடிய ஒரு உலகத்தை - எதிர்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். பெற்றோர்கள், போதைப் பொருள்களைப் பயன்படுத்தும்படியான சோதனையைத் தங்கள் பிள்ளைகள் எதிர்கொள்ளும்போது, அவர்கள் சரியான தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்தப் போதிய அளவு போதித்துள்ளதாக நம்பிக்கை வைக்கின்றனர். இருப்பினும் பிள்ளை தவறான முடிவை ஏற்படுத்தினால் அது பெற்றோரின் தவறாக இருக்க வேண்டும் என்ற அவசியம் உள்ளதா? ஒரு கருத்தில், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சோதிக்கப்படும்படி அனுமதித்தனர், ஆனால் அவர்கள் அந்தப் பிள்ளைகளைச் சோதிக்கவில்லை என்பது உறுதி! அவ்வாறே தேவன் நம்மை, தவறான தேர்வு செய்தல்களில் இருந்து காப்பதற்காக எல்லாவற்றையும் செய்கிறார். நமது சொந்த முடிவுகளை மேற்கொள்ள நமக்குச் சுயாதீனம் அளித்தலில் அவர், நாம் சோதிக்கப்படும்படி அனுமதிக்கிறார்; ஆனால் அவரே நம்மை சோதிப்பதில்லை. தேர்ந்துகொள்ளுதல் மற்றும் சோதனைகள் ஆகியவற்றை நாம் எதிர்கொள்ள அனுமதிப்பதில், அவர் நமது சொந்த சுயாதீனத்தில் அவர்மீது அன்புகூரவும் அவருக்குக் கீழ்ப்படியவும் சிலாக்கியத்தை நமக்குத் தருகிறார்.*

## *பொய் #2*

***பொய்: "பிசாசானவன் உங்களைப் பாவம் செய்ய வைக்கிறான்."***

***சத்தியம்: பிசாசானவன் நம்மைச் சோதிக்கிறான், ஆனால் நாம் பாவம் செய்யும்படி அவன் நம்மைக் கட்டாயப்படுத்த முடியாது***

*நாம் யாவருமே இந்தப் பொய்யைக் கேள்விப்பட்டிருக்கிறோம் - மற்றும் நமக்கு நாமே பின்வருமாறு நாம் கூறியிருக்கலாம்: "பிசாசானவன் என்னை அதைச் செய்யவைத்தான்!" இந்தக் கூற்று ஒரு நல்ல சாக்குப்போக்கை ஏற்படுத்துகிறது, ஆனால் இது உண்மையல்ல.*

*பிசாசானவன் நம்மைச் சோதிக்கிறான் என்பது உண்மையே. வேதாகமத்தில் பிசாசானவன், சோதனைக்காரன் என்று சித்தரிக்கப் பட்டுள்ளான் (மத்தேயு 4:3). அவன் ஏதேன் தோட்டத்தில் ஆதாமையும் ஏவாளையும் சோதித்தான் (ஆதியாகமம் 3); அவன் யோபுவைச் சோதித்தான் (யோபு 1; 2); அவன் இயேசுவைச் சோதித்தான் (மத்தேயு 4:1-11); மற்றும் அவன், பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகப் பொய்கூறும்படி அனனியாவையும் சப்பீராளையும் சோதித்தான் (நடபடிகள் 5:3). அவன் "சோதனைக்காரன்" என்றும் (1 தெசலோனிக்கேயர் 3:5) "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" என்றும் (1 பேதுரு 5:8) அழைக்கப் படுகிறான்.[6]*

*இருப்பினும் பிசாசானவன், நாம் செய்ய விரும்பாதவற்றைச் செய்யும்படியாக்க முடியாது. யோபுவின் வரலாறு, சாத்தான் மீது தேவன்*

*வரையறை வைக்கிறார் என்பதை விவரிக்கிறது, இதன் விளைவாக அவன் நாம் பாவம் செய்யும்படி கட்டாயப்படுத்த முடியாது. "பிசாசானவன் என்னை அதைச் செய்ய வைத்தான்" என்பது ஒரு பொய்யாக உள்ளது - இது தவறு என்று நாம் அறிந்துள்ளவற்றை நாம் செய்யும்போது நாம் தப்பிக்க முயற்சி செய்வதற்காகக் கூறும் சாக்குப்போக்காக உள்ளது - என்பதை நாம் காண்பது அவசியமாக உள்ளது.*

## *பொய் #3*

***பொய்: "ஒருக்காலும் சோதிக்கப்படாதபடி நீங்கள் மிகவும் நல்லவராக இருக்க முடியும்."***

***சத்தியம்: எல்லாரும் சோதிக்கப்படுகிறோம், மற்றும் எவரொருவரும் தாம் சோதிக்கப்படாத அளவுக்கு மிகவும் நல்லவராக இருக்க இயலாது. ஆவிக்குரிய வகையில் பக்குவம் அடைந்தவர்கள், மற்றவர்களைப் போன்று, அடிக்கடி சோதனைக்கு இடம் கொடுத்துவிட மாட்டார்கள்.***

*ஒருவர் அல்லது ஒருத்தி எவ்வளவு நல்லவராக இருந்தாலும், ஒவ்வொரு நபரும் சோதிக்கப்படச் சாத்தியக்கூறு உள்ளது என்பதை நாம் அறிய வேண்டும். அப்போஸ்தலரான பவுல் சோதிக்கப்பட முடிந்திருந்தது (காண்க - 1 கொரிந்தியர் 9:26, 27). "உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகிறவனுமாயிருந்தான்" என்று விவரிக்கப்பட்டிருந்த யோபு (யோபு 1:1) சோதிக்கப்பட முடிந்திருந்தது. தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமாயிருந்த மனிதரான தாவீது சோதிக்கப்பட முடிந்திருந்தது. தேவனுடைய சாயலாக படைக்கப்பட்டிருந்த ஆதாமும் ஏவாளும் சோதிக்கப்பட முடிந்திருந்தது தேவனுடைய குமாரனான இயேசு கிறிஸ்துவும்கூடசோதிக்கப்பட முடிந்திருந்தது (மத்தேயு 4:1-11; எபிரெயர் 2:17, 18; 4:14-16). இயேசு சோதிக்கப்பட முடிந்திருந்தது என்றால், எவரொருவரும் - அவர் எவ்வளவு நல்லவராக இருக்க முயற்சி செய்திருந்தாலும் - சோதிக்கப்பட முடியும்.*

*சோதிக்கப்படுதலில் இருந்து நம்மைக் காப்பாற்றக்கூடிய அளவுக்கு நாம் ஆவிக்குரிய வகையில் பக்குவ நிலையை அடைந்துள்ளதாக நினைக்கத் தொடங்கும்போது, நாம் அதைப்பற்றி மறுபடியும் சிந்தித்தல் அவசியமாக உள்ளது. 1 கொரிந்தியர் 10:12ல் உள்ள எச்சரிக்கையை நாம் நினைவில் வைக்க வேண்டும். "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்."*

*நாம் கிறிஸ்துவுக்குள் பக்குவம் அடைகையில், சோதனையை அதிகம் அதிகமாக எதிர்த்து நிற்பவர்கள் ஆக வேண்டும். இயேசு செய்தது போன்று சோதனைக்காரனுக்கு "இல்லை" என்று கூறக் கூடியவர்களாக இருத்தலினால், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றக்கூடிய திறன் என்பது கிறிஸ்தவ பக்குவத்தின் அடையாளமாக உள்ளது. "ஒரு பக்குவம் அடைந்த கிறிஸ்தவர் பாவம் அற்றவராக இருப்பதில்லை, ஆனால் ஒரு பக்குவம் அடைந்த கிறிஸ்தவர் குறைவாகப் பாவம் செய்வார்" என்று நாம் கூறலாம்.*[7]

# பொய் #4

***பொய்: "நீங்கள் சோதிக்கப் படும்போது - அதாவது, நீங்கள் தவறைச் செய்ய விரும்பும்போது - அது பாவமாக உள்ளது."***

***சத்தியம்: சோதிக்கப்படுதல் பாவமாக இருப்பதில்லை, ஆனால் சோதிக்கப்படுதல் பாவம் செய்வதற்கு வழிநடத்துகிறது.***

*சோதிக்கப்படுதல் என்பது சிலவிஷயங்களைச் செய்ய விரும்புதலாக உள்ளது; ஆகையால், பாவம் செய்யச் சோதிக்கப்படுதல் என்பது பாவம் செய்ய விரும்புதலாக உள்ளது. யாரேனும் ஒருவரிடம் கோபம் கொள்ளுதல் அல்லது ஒரு பெண்ணை இச்சித்தல் என்பது பாவம் நிறைந்ததாக உள்ளது என்று இயேசு கூறியதால் (மத்தேயு 5:22, 28), சோதிக்கப்படுதல் - தவறைச் செய்ய விரும்புதல் - என்பது பாவம் நிறைந்ததாக உள்ளது என்று நாம் முடிவு செய்யலாம். இருப்பினும் யாக்கோபு 1:14, 15ம் வசனங்கள், "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" என்று கூறுகின்றன. சோதிக்கப்படுதல் எவ்வாறு நடக்கிறது? மற்றும் அது எங்கே வழிநடத்துகிறது?*

1. *பாவம் செய்வதற்கான வாய்ப்பு ஒன்று உள்ளது. பிசாசானவன் அந்த வாய்ப்பை அளிக்கிறான் மற்றும்/அல்லது அந்த வாய்ப்பை அனுகூலப்படுத்திக் கொள்வதால் நாம் எவ்வாறு பயன் அடைவோம் என்று அவன் கருத்துத் தெரிவிக்கிறான். தேவனால் நியமிக்கப்பட்ட எல் லைக்குள் சாத்தான் செயல்படுகிறான் (1 கொரிந்தியர் 10:13), ஆனால் நாம் தனிப்பட்ட வகையில் விரும்புபவற்றை அளிப்பதன் மூலம் நம்மைச் சோதிப்பது எவ்வாறு என்பதை அவன் அறிந்திருக்கிறான்.*
2. *சாத்தானால் அளிக்கப்படும் புறம்பான வாய்ப்பானது உள்ளான விருப்பம் - தவறு செய்தல் என்பது அளிப்பதாகத் தோன்றும் பயனைக் கொண்டிருக்கும் விருப்பம் - ஒன்றைச் சந்திக்கிறது.*
3. *தவறு செய்வதினால் பயனைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை நமது விருப்பம் சந்திக்கும் போது, தவறு செய்வதற்கான ஒரு மனச்சாய்வு உண்டாக்கப் படுகிறது; நாம் செய்யக்கூடாதவற்றைச் செய்ய விரும்புகிறோம். அந்த விருப்பமே சோதிக்கப்படுதலாக உள்ளது.*
4. *பின்பு நாம் நமது மனச்சாய்வின்படி செயல்படுவதா இல்லையா என தேர்வு செய்தலை, தப்பிக்கொள்ளும்படியான தேவனுடைய வழிக்கு ஒப்புக்கொடுத்தல் அல்லது அதைக் கண்ணோக்குதலைக் கொண்டிருக்கிறோம் (காண்க - 1 கொரிந்தியர் 10:13).*
5. *நாம் சோதிக்கப்படுதலுக்கு இடம் கொடுத்தால் - நாம் செய்ய விரும்புபவற்றைச் செய்தால் - நாம் பாவம் செய்கிறோம். நாம் சோதிக்கப்படுதலை எதிர்த்து நின்றால் மற்றும் நமது மனச்சாய்வைப் பின்பற்ற மறுத்தால், அப்போது நாம் பாவம் செய்வதில்லை.*
6. *தவறானதைச் செய்தலினால் நாம் சோதிக்கப்படுதலுக்கு இடம்*

*கொடுத்தால், மரணம் - ஆவிக்குரிய மரணம் - தேவனிடத்தில் இருந்து பிரிதல் விளைவாகிறது. பாவம் செய்வதில் நாம் விடாப்பிடியாக நிலைத்திருந்தால். நித்திய மரணம் பின்தொடரும்.*

*யாக்கோபு 1:14, 15 வசனங்களில் உள்ள வரிசைமுறை, குறிப்பிடத்தக்கதாக உள்ளது: ஒருவர் "தமது சுய இச்சையினால் இழுக்கப்பட்டிருக்க" மற்றும் "எடுத்துச்செல்லப் பட்டிருக்க" மற்றும் பாவம் செய்ய முடிவெடுக்க முடியும். பின்பு பாவமானது, பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்.* விருப்பம் என்பது பாவமாக இருப்பதில்லை *என்பது முக்கியமான உண்மையாக உள்ளது.*[8] ஆகையால், சோதிக்கப்படுதல் பாவமாக இருப்பதில்லை. *சிலவற்றைச் செய்ய விரும்புதல் என்பது மாத்திரமே தன்னில்தானே பாவமாயிருப்பதில்லை. சோதிக்கப்படுதல் பாவமாக இருப்பதில்லை; சோதிக்கப்படுதலுக்கு இடம் கொடுப்பது பாவமாக இருக்கிறது! அதே வேளையில், சோதனையைப் பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், ஏனெனில் சோதிக்கப்படுதல் - நமது விருப்பங்களினால் தூண்டப்படுதல் - பாவம் செய்ய வழிநடத்துகிறது, மற்றும் பாவம் மரணத்தை உண்டாக்குகிறது!*

## *பொய் #5*

***பொய்: "உங்களைப் போன்று மற்ற மக்கள் ஒருக்காலும் சோதிக்கப்பட்டு இருப்பதில்லை."***

***சத்தியம்: ஒவ்வொரு நபரும் தனிப்பட்டவராக இருக்கிறார், ஆனால் ஒவ்வொரு நபருமே சோதிக்கப் படுதலின் அதே வகைகளை அனுபவிக்கிறார்.***

*அனேகமாக நாம் எல்லாருமே, ஒரு வேளையில் அல்லது மற்ற வேளையில், நாம் சோதிக்கப் பட்டிருப்பது போன்று வேறு எவருமே சோதிக்கப் பட்டிருக்க முடியாது என்ற தவறான கருத்தை நம்பி இருக்கலாம். அப்படி இருந்தால் நாம் பவுலின் வார்த்தையை மறுபடியும் கேள்விப்படுதல் அவசியமாக உள்ளது: "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை" (1 கொரிந்தியர் 10:13அ).*

*நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்டவர்களாக இருக்கையில், நாம் யாவருமே ஒரே வகையான சோதித்தல்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருக்கிறோம். ஆதாம் மற்றும் ஏவாள் மற்றும் இயேசு ஆகியோரைப் போன்றே, நாம் யாவரும் "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகியவற்றினால்" (1 யோவான் 2:16) சோதிக்கப்படுகிறோம்.*[9] *எபிரெயருக்கு எழுதிய நிருபம் இயேசு "*எல்லாவிதத்திலும் நம்மைப்போல் *சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறார்" (எபிரெயர் 4:15; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்று உண்மையில் நமக்கு உறுதி அளிக்கிறது. எவரொருவரும், சோதனைக்குச் சரணடைவதற்கு, "வேறு எவரும் ஒருக்காலும் அனுபவித்திராத வகையில் நான் சோதிக்கப்பட்டேன்" என்று சாக்குப்போக்கு கூற முடியாது.*[10]

# *பொய் #6*

***பொய்: "சோதிக்கப்படுதல் மிகவும் பலமானதாக இருக்கும்போது, அதை எதிர்த்து நிற்பதற்கான வழி எதும் உங்களுக்கு இருப்பதில்லை."***

***சத்தியம்: கிறிஸ்தவர்கள் சோதிக்கப்படும்போது அவர்களுக்குத் தேவன் உதவுவார், ஆனால் அவர் அளிக்கும் தப்பிக்கொள்ளும்படியான போக்கைக் கிறிஸ்தவர்கள் தேட வேண்டும்.***

*பலர் தங்களின் பாவம் செய்தலை, சோதிக்கப்படுதலானது தங்களால் எதிர்த்து நிற்கக்கூடாத அளவுக்கு மிகவும் பலமானதாக இருந்தது என்று உரிமைகோருவதன் மூலம் சாக்குப்போக்குக் கூறச் சாய்கின்றனர். இருப்பினும் இந்தக் கருத்தை 1 கொரிந்தியர் 10:13ல் பவுல் மறுத்துரைத்தார்: "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்."*

*சோதிக்கப்படுதல் என்பது எதிர்த்து நிற்கக் கூடாத அளவுக்கு மிகவும் பலமானதாக உள்ளதா? இருக்கலாம், ஆனால் ஒரு உண்மை தவிர - அந்த உண்மை தேவன் என்பதாகவே உள்ளது - இது அவ்வாறு இருக்கலாம்! சோதிக்கப்படும் வேளைகளில் அவர் நமக்கு உதவவில்லை என்றால், நாம் சோதனையை எதிர்த்து நிற்கவும் நீதியுள்ள வாழ்வை நடத்தவும் வாய்ப்பு எதையும் கொண்டிருக்க மாட்டோம்.*

*இருப்பினும், தேவன் நமது பக்கத்தில் இருக்கிறார் மற்றும் நாம் சோதிக்கப்படுதலை வெற்றி கொள்ள அவர் நமக்கு உதவுவார்! நாம் "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல். தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்று தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கூறினார் (மத்தேயு 6:13அ). நாம் சோதிக்கப்படுதலை எதிர்கொள்ளும்போது, நம்மால் எதிர்த்து நிற்கக்கூடும் திறனுக்கு அப்பால் நாம் சோதிக்கப்படுதலைத் தேவன் அனுமதிக்க மாட்டார் என்ற உறுதிப்பாட்டைப் பற்றிக்கொண்டவர்களாக, தப்பிக்கொள்ளும்படியான அவரது வழியைக் கண்ணோக்க வேண்டும்.*

*நம்மால் சகித்துக்கொள்ள முடிவதற்கு அப்பால் நாம் சோதிக்கப்படுவதற்குத் தேவன் அனுமதிக்க மாட்டார் என்ற உண்மைக்கு, யோபு ஒரு நல்ல உதாரணமாக இருக்கிறார். யோபுவைச் சோதிக்கும்படி சாத்தானுக்குத் தேவன் அனுமதி அளித்தார், ஆனால் அவன் சற்றுதூரம் செல்ல மாத்திரமே அவர் அனுமதித்தார். யோபு எதிர்த்து நிற்கக் கூடும் திறனுக்கு அப்பால் அவரைச் சோதிப்பதற்குத் தேவன் அனுமதிக்கவில்லை. நாம் சோதிக்கப்படும்போது தேவன் நமக்குத் தருகிற அளிப்புகளின் இரண்டாவது வகையை,யோசேப்பின் வரலாறு விவரிக்கிறது. தேவன் யோசேப்புக்குத் தப்பிக்கொள்ளும்படியான ஒரு வழியை அளித்தார்: போத்திபாரின் மனைவி அவரை விபசாரம் செய்ய வற்புறுத்தியபோது, திறந்த கதவும் ஓடுவதற்குக் கால்களும் அவருக்கு அளிக்கப்*

*பட்டிருந்தன (ஆதியாகமம் 39:11-18).*

*தப்பிக்கொள்ளும்படியான ஒரு போக்கைத் தேவன் எப்போதுமே அளிக்கையில், அதில் இருந்து அனுகூலம் அடையும்படிக்குத் தேவன் நம்மை ஒருக்காலும் கட்டாயப்படுத்துவதில்லை. பாவத்தைத் தவிர்ப்பதற்கான ஒரு வழியை அவர் நமக்கு அளிக்கிறார், ஆனால் முடிவெடுத்தலை நம்மிடத்தில் விட்டு விடுகிறார். மிகப்பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள், பாவத்தை விட்டு ஓடுவதற்கு மாறாக அதை வரவேற்கின்றனர். அவர்கள் தாங்கள் சோதிக்கப்படும் இடங்களுக்குச் செல்கின்றனர், அவர்கள் தங்களை மேலும் சோதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும்படி தங்களைச் சோதிக்கும் மக்களுடன் செல்கின்றனர். சோதிக்கப்படுதலில் இருந்து தப்பி ஓடுவதற்குப் பதிலாக சோதிக்கப்படுதலை நாம் வரவேற்றால், "எங்களைச் சோதனைக்குட்பண்ணாமல்" என்று நாம் ஜெபிக்கும்போது, நாம் மாய்மாலக்காரர்களாக இருப்பதில்லையா?*

*எந்த வகையிலும், கிறிஸ்தவர்கள் "சோதனை மிகவும் பலமாக இருந்தது; அதை என்னால் எதிர்த்து நிற்கக் கூடாதிருந்தது" என்று கூறுவதன் மூலம் தங்கள் பாவங்களுக்குச் சாக்குப்போக்குக் கூற முடியாது.*

## *பொய் #7*

***பொய்: "நீங்கள் மன்னிக்கப்படக்கூடாத அளவுக்கு சோதனைக்கு இடம் கொடுத்து பாவம் செய்துள்ளீர்கள்."***

***சத்தியம்: ஒருவர் அந்த பாவத்தில் இருந்து மனந்திரும்பி மன்னிப்பைத் தேடினால், தேவன் எந்தப் பாவத்தையும் மன்னிக்க முடியும் மற்றும் மன்னிப்பார்.***

*சோதிக்கப்படுதலுக்கு நாம் ஒருமுறை ''ஆம்'' என்று சம்மதம் தெரிவித்து பாவத்தில் ஆழ்ந்து போன உடன், நமது வாழ்வின் எஞ்சிய பகுதி முழுவதிலும் நாம் அந்த நிலையால் தாக்கப்பட்டு இருக்கிறோம், நாம் செய்துள்ள பயங்கரமான பாவங்களினிமித்தம் தேவன் நம்மை ஏற்றுகொள்ள மாட்டார் என்று நாம் நம்ப வேண்டும் என்று சாத்தான் விரும்புகிறான். ஆனால் சத்தியம் வேறுவிதமாக உள்ளது. தேவன் நம்மீது அன்புகூருகிறார் மற்றும் நாம் செய்துள்ள எந்தப் பாவத்தையும் மன்னிக்கப் போதுமான அளவுக்கு அவரது கிருபை பெரிதாக உள்ளது. தாவீது செய்த விபசாரம் மற்றும் கொலை ஆகியவற்றைத் தேவன் மன்னித்தார், மற்றும் அவர் பேதுரு இயேசுவை மறுதலித்ததை மன்னித்தார். உண்மையில் தேவன், கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தவர்களுக்கு மன்னிப்பை விரிவாக்கினார். அவர் நம்மையும் மன்னிக்க முடியும்!*

## *முடிவுரை*

*இனியும் நாம் சாத்தானுடைய பொய்களை நம்பக்கூடாது! நீங்கள் சோதனைக்கு இடம் கொடுத்து, பாவம் செய்திருந்தால், தேவன் உங்களை மன்னிக்க முடியும். பாவத்தில் இருந்து கிறிஸ்துவினிடத்திற்குத் திரும்புங்கள்!*

குறிப்புகள்

*[1]10:9ல் "பரீட்சைபார்த்து" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள வார்த்தை ekpeirazō. என்பதாக உள்ளது.* [2]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testment Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 116. [3]Alex R. G. Deasley, "Temptation, Test," *Baker Theological Dictionary of the Bible* (Grand Rapids, Mich.: Baker Books, 2000), 762. *[4]இவ்வசனப் பகுதிகள் யாவற்றிலும் மூலமொழியில் (peirazō என்ற) வார்த்தையின் வடிவம் உள்ளது. "சோதித்தல்" மற்றும் "பரீட்சித்தல்" ஆகியவற்றிற்கு நடபடிகள் 9:26; 26:21ல் அதே வினைச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. [5]இவ்வசனப் பகுதிக்கும், தேவன் மக்களைச் சோதிக்கிறார் என்று கூறும் மற்ற வசனப்பகுதிகளுக்கும் இடையில் உள்ளதாகத் தோன்றும் நேரெதிர்க்கருத்தைச் சிலர் சுட்டிக்காண்பிக்கின்றனர். எடுத்துக்காட்டாக,* KJV *வேதாகமத்தின்படி தேவன் ஆபிரகாமைச் சோதித்தார் (ஆதியாகமம் 22:1). இப்படிப்பட்ட வசனப்பகுதிகளில் இவ்வார்த்தை, பாவம் செய்யும்படி தூண்டுகிறார் என்ற கருத்திற்கு மாறாக, "பரீட்சிக்கிறார்" என்ற கருத்திலேயே இவ்வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதே மிகச் சிறந்த விளக்கமாக உள்ளது. பாவம் செய்யும்படி எவரொருவரையும் தேவன் தூண்டுவதில்லை. [6]சோதனைக்காரன், எதிராளி அல்லது வஞ்சிக்கிறவன் என்ற வகையில் சாத்தானைப் பற்றிப் பேசும் வசனப்பகுதிகளுக்கு, 2 கொரிந்தியர் 2:11 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 2:10; 12:9 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும். [7]இந்தக் கூற்று, அர்க்கன்சாஸ் மாகாணத்தின் ஜட்சோனியாவின் கிறிஸ்துவின் சபையில் கிளென் பேஸ் அவர்கள் பிரசங்கித்த பிரசங்கத்தில் இருந்து தழுவப்பட்டது,* n.d. *[8]மத்தேயு 5:28ல் உள்ள "இச்சை" (*epithumeō*) என்பது விபசாரம் செய்வதற்கான கணநேர இச்சையை மாத்திரம் குறிப்பதாக இருக்கக்கூடாது. ஒருவேளை அது, உண்மையில் சூழ்நிலைகள் அனுமதித்தால் விபசாரம் செய்ய வழிநடத்துகிறதான, பெண் ஒருத்தியை இச்சையுடன் தொடர்ந்து, பலமாக நோக்கும் செயலை அர்த்தப்படுத்தலாம். [9]ஒவ்வொரு யுகத்திலும் சோதிக்கப்படுதல் மற்றும் பாவங்கள் ஆகியவற்றின் ஒன்றுபோன்ற தன்மையானது, 1 கொரிந்தியர் 10:1-12ல் பாவம் பற்றிப் பவுல் கொரிந்தியர்களை எச்சரித்த வேளையில் அவர் இஸ்ரவேல் மக்களின் பாவங்களை ஒப்பிட்டதன் மூலமாகவும் கருத்தாகத் தெரிவிக்கப்படுகிறது. [10]"சோதனைக்குச் சரணடைதல் என்பது ஒருக்காலும் தவிர்க்க இயலாததாக இருப்பதில்லை. இருளின் வல்லமைகள் மீது கிறிஸ்துவின் வெற்றியானது (மத்தேயு 12:28-29; கொலோசெயர் 1:13), அவருக்குள் ஒருமைப் பட்டிருப்பவர்களுக்கு தப்பிக்கொள்ளும்படியான போக்கு எப்போதுமே உள்ளது என்று அர்த்தப்படுகிறது (1 கொரிந்தியர் 10:13)" (*Deasley, *762).*